ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Rational thinking in Kalaignar's Kuralloviyam

# கலைஞரின் குறளோவியத்தில் பகுத்தறிவுச் சிந்தனை

Dr. C. Markandan
*Assistant Professor, Vels University, Chennai, India*
**முனைவர் செ. மார்க்கண்டன்**
*உதவிப்பேராசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை, இந்தியா*

***Article Info:***

Received 09-12-2022 | Accepted 10-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 16-18

**ABSTRACT**

Thirukkural is the foundation of world creation. The life style of Thirukkurulai tends to be aligned with the contemporary lifestyle of the artist. Karunanidhi translated the philosophy of Thirukkural into poetic language. The purpose of Kuraloviya may be to analyze the ideology expressed by Thirukkural from a rational point of view. The artist visualized the ideology of Thirukkural. Kuraloviyam is the evolution of the simple form that Thirukkuralai brings to the people. Kuraloviyam, presenting the concept at the gate of imagination, questions the existence of God through reason. If learned education will help you in the next birth, then what is the need to learn in the next birth? That logically asks the question. The Kurallovianm artist makes a rational argument that it is an exaggeration to convey the need for education.

***Keywords:***

*Kural in Karunanidhi's view, Kuraloviyam published magazines, Context of Kuraloviyam, Reasoning about God, Reasoning in poor birth thinking*

## முன்னுரை

உலக படைப்பாக்கத்தின் உயர், உயிர் பெற்ற படைப்பு திருக்குறள். திருக்குறளுக்கான உரைக்களம், காலம் நெடுகிலும் புதுப்புது பரிணாமத்தைத் தனதாக்கிக் கொள்கிறது. அழியாப்புகழ் கொண்ட குறளுக்குப் பதவுரை, விரிவுரை, விளக்கவுரை என அக்காலம் தொட்டு இக்காலம் வரை ஆழ்ந்தும், ஆராய்ந்தும் உரை எழுதும் பெருமக்கள் பலர். ஒரு குறிப்பிட்ட மதத்தின் அல்லது மார்க்கத்தின் வழிகாட்டும் நூலாக இல்லாமல், பொதுவான வாழ்க்கை நெறி வகுக்கும் நூலாகத் திகழ்வது திருக்குறள். இதனால் திருக்குறளின் அருமையை உணர்ந்த கருணாநிதி சமகால வாழ்வியலுடன் குறளுக்கானப் பொருளைக்காட்சிப்படுத்தக் கவிதைமொழியில் சொல்லோவியம் தீட்டியதே இந்தக் குறளோவியமாகும். குறளோவியம் முழுக்க கவிதைமொழி நிறைந்து கிடக்கிறது. கவிதை மொழியில் பகுத்தறிவைக் காண்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

## கருணாநிதியின் பார்வையில் குறள்

திருக்குறள் முழுமைக்கும் முறையாக உரை காண முயலவில்லை கருணாநிதி. தன் உள்ளம் கவர்ந்த குறளை, கவிதையுடன் உரைநடை கலந்த நடையில் காட்சிப்படுத்த முனைந்துள்ளார். எல்லோரிடமும் எளிமையுடன் குறளைக் கொண்டு சேர்ப்பதே அவரின் தலையாய எண்ணமாக இருந்துள்ளதை, கருணாநிதியின் பின்வரும் கூற்றுகளே விளக்குகின்றன. **"ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக் கொண்டிராமல், பலரும் விரும்பிப் படிக்கத்தக்கவண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துக்களை நெஞ்சத்தில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத்துடிப்பு, எனக்கு முப்பது ஆண்டு காலமாகவே உண்டு."** (மு. கருணாநிதி; குறளோவியம்; 2011; v) இந்நூலின் முகப்புரையில் இவ்வாறு குறிப்பிடுவதைக் காணலாம்.

கருணாநிதி தமது குறளோவியத்தில் அறத்துப்பாலில் 76 குறட்பாக்களுக்கும் பொருட்பாலில் 137 குறட்பாக்களுக்கும், இன்பத்துப்பாலில் 141 குறட்பாக்களுமாக மொத்தம் 354 குறட்பாக்களுக்கு மட்டுமே சொல்லோவியம் தீட்டியுள்ளார்.

## குறளோவியம் வெளியான இதழ்கள்

முரசொலி வாரஇதழில் 1956–ஆம் ஆண்டு குறளோவியம் என்னும் தலைப்பில் எழுதத் தொடங்கினார். மேலும், தினமணி கதிர், குங்குமம் போன்ற இதழ்களிலும் வெளிவந்துள்ளதைக் காணலாம். இத்தகைய இதழ்களின் வழியே தனக்கான தனி எழுத்துநடையை உருவாக்கியவர் கருணாநிதி. அதனை, "கவிதை நடையை உரைநடையிற் கலந்து, அதனைக் கரடுமுரடான கடுந்தமிழ் நடையாக்கிவிடாமல், எழில்கூட்டி எளியநடையில் வழங்கிடும் புதிய நடையொன்றை 1945 – ஆம் ஆண்டு நான் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் தந்தைபெரியார் அவர்களின் அரவணைப்பில் இருந்தபோதே அறிமுகப்படுத்தினேன்". (மு. கருணாநிதி; குறளோவியம்; 2011; 5) இக்கூற்றின்வழியே கருணாநிதி புதிய சொல்லோவிய நடையை குறளோவியத்தில் புகுத்தி உள்ளார் என்பதை இக்கூற்று தெளிவுப்படுத்துகிறது.

### குறளோவியத்தின் சூழ்நிலையுரை

திருக்குறளின் உரையாசிரியர்கள் இதுவரை பயணிக்காதப் பக்கங்களில் புதுப்பார்வை வெளிச்சத்தைப் பாய்ச்சியவர் கருணாநிதி. நடைமுறை வாழ்வின் பின்னணிகளைக் குறளுக்குப் பொருளாக்கி இருப்பது பெரும் தனிச்சிறப்பாகும். கருணாநிதியின் இப்புதிய போக்கை வ.சுப.மாணிக்கம் ஆதரிப்பதைப் பின்வரும்கூற்றுவிளக்குகிறது. **"டாக்டர் கலைஞரின் குறளோவியத்திற் பலப் புது நெறிகள் உள. ஒவ்வொரு குறட்கு முன்னும் ஏற்ற சூழ்நிலை அல்லது பின்புலம் அமைத்துக் காட்டியிருப்பது முதற்சிறப்பு. திருக்குறள், ஒருநூலின் கிளையில்லை. அதுவே முதல்; மக்கள் வாழ்வியக்கத்தை அலசிப்பார்த்துக் குறள் கண்டவர் வள்ளுவர். அவர் கண்ட பலநிகழ்ச்சிகள் குறட்பிழிவாயின. இவ்வுண்மையை அறிந்த நம் கலைஞர் கருணாநிதியார், கற்பனையாலும் குறட்கேற்ற சூழ்நிலைகளைத் தொடுத்தும் அடுத்தும் கற்பாரை வழிப்படுத்துகின்றார். இத்தனி நெறி நோக்கிக் குறளோவியத்தை 'சூழ்நிலையுரை' என்றும் கூறலாம்".** (மு. கருணாநிதி; குறளோவியம்; 2011; 8) குறளோவியத்தின் மதிப்புரையில் வ.சுப. மாணிக்கம் அவர்களின் கருத்து இதனை உறுதிப்படுத்துகிறது.

### குறளோவியத்தில் பகுத்தறிவு

குறளுக்கான சொல்லோவியத்தை தீட்ட முனைந்த கருணாநிதி உரை நடையில் கவிதை கலந்தும், எளிமையும், இனிமையும் குழைத்தும், நடைமுறை சூழ்நிலைகளுடன் தனது குறளோவியத்தை வடிவமைத்துள்ளதை அறியலாம். மேலும், பகுத்தறிவு சித்தாந்தங்களை வேற்று உரைகளின் மாற்றாக நிறுத்தி இருப்பது தனிச்சிறப்பாகும். அறிவுப் பெருவெளியின் தொகுப்பான திருக்குறட்கு விளக்கும் முகமாகத் தேவர்களின் வானவாழ்வையும், புராணங்களின் மயக்கக்கதைகளையும், ஏழுபிறவிகளில் நம்பிக்கைகாட்டி வரும்போக்கு ஒவ்வாது. மானுடராய் வாழ்கின்ற மக்களின் சூழ்நிலைச்சார்ந்த ஒழுக்கலாறுகளைக் குறளுக்குப் பகுத்தறிவுப் பார்வையுடன் எடுத்துக்காட்டுவது சாலப்பொருந்தும்.

### தெய்வம் குறித்த பகுத்தறிவுச் சிந்தனை

தெய்வத்தைத் திருவள்ளுவர் ஒப்புக் கொண்டாரா? இல்லையா? என்ற விவாதத்துடன் தனக்கான பகுத்தறிவுக் கேள்வியை முன்வைக்கிறார் கருணாநிதி. திருக்குறளின் உரையாசிரியர்கள் பலர், இயற்கையைக் கடவுளாகவும் உருவ வழிப்பாட்டிலான கடவுள்களையும் முன்னிறுத்துவதைக் காணலாம்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்."**

தெய்வத்திற்கான குணங்களாகச் சொல்லப்படுகின்ற அறம் சார்ந்த பொருண்மைகளை மனிதன் பெற்று வாழ்ந்தால் **'அவன் தெய்வத்திற்கு நிகராகக் கருதப்படுவான்'** என்பது கருணாநிதியின் கருத்தாகும். இறைவனுக்குரிய இத்தனைப் பெருமையும் கொண்டு ஒருவன் வாழவேண்டும் என்று வள்ளுவர் கருதியதாகக் கூறுகிறார்.

**"வள்ளுவர், தான் வாழ்ந்த காலத்து நிலையைத் தனது குறளில் வடித்துக் கொடுக்கத் தவறவில்லை. இறை அல்லது இறைவன் அல்லது தெய்வம் இவற்றிக்குச் சொல்லப்படும் இலக்கணங்களை அவர் புறக்கணிக்காதது மட்டுமல்ல; அந்த இலக்கணங்களின் வடிவமாக, மாந்தர் திகழ வேண்டுமென விரும்பினார்."** (மு. கருணாநிதி; குறளோவியம்; 2011; 18).

மனிதனை மீறிய ஒரு சக்தி இந்த உலகை இயக்குகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறார். எழுத்துக்களுக்கு **'அகரம்'** முதல் என்பது போல, உலகிற்கு ஆதிபகவன் அடிப்படை என்றார். இறைவனுக்குரிய பல பெருமைகளையும் கொண்டு ஒருவன் வையத்தில் வாழவேண்டும் என்று வள்ளுவர் கருதுவதை கருணாநிதியின் குறளோவியம் விளக்குகிறது.

தனது பகுத்தறிவின் வழி இறைவனுக்கான குணங்களைத் திட்டவட்டமான கருத்தாக உலகிற்கு அறிவுறுத்துகிறார். தெய்வத்திற்கென எத்தனையோ அருங்குணங்கள் சொல்லப்படுகின்றன. உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவான் என்பது ஒழுக்கநிலையில் மனிதனை வாழ வைக்கச் சொல்லப்படும் மிகையியலாகும்.

### ஏழ் பிறப்புச் சிந்தனையில் பகுத்தறிவு

ஏழுபிறப்பு, மறுபிறப்பு என்பவைகளை கருணாநிதி ஏற்கவில்லை. மறுபிறப்பு சார்ந்த நம்பிக்கைகளை, மற்ற உரையாசிரியர்களிடமிருந்து கருணாநிதி வேறுபட்டுப் பகுத்தறிவு நோக்கில் குறளுக்கான பொருளை முன்வைப்பதை நோக்கலாம்.

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

கல்வியைக் கற்பதனால் அனைத்துச் செல்வங்களும் கிடைக்கும் என்ற நோக்கில், எப்படியாவது கல்வியை மக்களிடம் புகுத்திவிட வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்திக் கூறப்படுவதே இந்த **"ஏழ்பிறப்பு"** சொல்லாடல் ஆகும்.

**"மனிதனைத் தீவினைகளில் ஈடுபடாமல் தடுத்திடவே, மறுபிறவி என்ற பயம் காட்டப்பட்டது என்பது தெளிவு. இந்த நிலை, வள்ளுவர் காலத்திலும் இருந்திருக்கிறது! அதனால்தான் கல்வியின் சிறப்பைக் கூறவந்தவர், அதன் தேவையை எல்லை கடந்து புகழ்ந்திருக்கிறார்."** (மு. கருணாநிதி; குறளோவியம்; 2011; 24)

இத்தகைய அழுத்தம் கல்விக்குத் தரப்படுகிறதே தவிர, ஏழுபிறவிகளுக்கு அல்ல என்பதைக் குறளுக்கான விளக்கமாக முன்வைக்கிறார் கருணாநிதி. **"ஒரு பிறப்பில் கற்ற கல்வி, ஏழுபிறப்பும் பயன்படும் என்கிறார். இது கல்வியின் பெருமையை மிகைப்படுத்தலேயன்றி ஏழுபிறப்பை ஒத்துக் கொண்டதாகாது. உலகில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் இளந்தளிர்களாகிப் பள்ளிக்குச் சென்றே கல்வி பயிலுகின்றன. முற்பிறப்பில் கல்வியே கற்காத குழந்தைகளா அத்தனையும்? முற்பிறப்பு என ஒன்றிருந்து, அப்போது கல்வி கற்றிருந்தால், இப்போது கற்கத் தேவையில்லையே"** (மு. கருணாநிதி; குறளோவியம்; 2011; 35) இத்தகைய கூற்றுகளின்வழி நாம் அறிவது மறுபிறவி அபத்தமான ஒன்று என்பதையும், கல்வி கற்பதற்காகச் சொல்லப்படும் மிகைப்படுத்தல்களே என்பதும் உண்மையாகிறது.

### முடிவுரை

மெய்யுணர்தலின் வலிமைகளையும், கல்வியின் பெருமைகளையும், மிகைப்படக் கூறியேனும் மக்களுக்குக் கல்வியின் பெருமையினை உணர்த்திட வேண்டும் என்ற வள்ளுவரின் அவாவினை கருணாநிதியின் குறளோவியத்தின் வழி முழுமை அடைவதை உணரலாம். மேலும், கருணாநிதியின் பகுத்தறிவுச் சிந்தனையின் வழி புனைவு, புராண, இதிகாசகட்டுக் கதைகள் புறம் தள்ளப்பட்டு, எதார்த்த நடப்பியல், சூழ்நிலைச் சார்ந்த கருத்துகள் வெளிப்படுவதால் குறளோவியம் பகுத்தறிவின் பெரும் சொல்லோவியம் என்பதை உணரலாம்.

## துணை நூற்பட்டியல்


1. மு, கருணாநிதி. *குறளோவியம்*. சென்னை, பாரதி பதிப்பகம், 2011.
2. சிற்பி, பாலசுப்பிரமணியம். *திருக்குறள்*. சென்னை, தாமரை பதிப்பகம், 2016.
3. பரிமேலழகர். *திருக்குறள்*. சென்னை, திருமகள் நிலையம், 2010.
4. மு, கருணாநிதி. *திருக்குறள்*. சென்னை, திருமகள் நிலையம், 2009.
5. ச, மெய்யப்பன். *திருக்குறள்*. சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 2013.


## References


1. M, Karunanithi. *Kuraloviyam*. Chennai, Bharathi Publications, 2011.
2. Sirpy, Bhalasupiramaniyam. *Thirukkural*. Chennai, Thamarai Publications, 2016.
3. Parimelazhagar. *Thirukkural*. Chennai, Thirumagal Nilayam, 2010.
4. M, Karunanithi. *Thirukkural*. Chennai, Thirumagal Nilayam, 2009.
5. S, Meyyappan. *Thirukkural*. Chennai, Manivasagar Publications, 2013.


**How to cite this article:** C, Markandan. "Rational thinking in Kalaignar's Kuralloviyam". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 16-18, https://aijtls.com/index.php/aijtls/article/view/5.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.